**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூலை - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, July - 2019**

FWC

| தரம் :- 12 (2020) | கர்நாடக சங்கீதம் | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி I

❖ சரியான விடையினைத் தெரிவு செய்க.

1) மத்தியஸ்தாயி தைவதத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகம்.
1. தைவதாந்திய இராகம் 2. உபாங்க இராகம் 3. பாஷாங்க இராகம்
4. நிஷாதாந்திய இராகம் 5. சாயலக இராகம்

2) ஸரிகமபதாநிஸ - ஸ்நிஸ்தாபமபகாமரிஸ என்ற ஆரோகண அவரோகணத்தை உடைய இராகம்.
1. பெஹாக் 2. காபி 3. கானடா 4. ஆரபி 5. பூபாளம்

3) மாது சம்பந்தமான அணிகளில் இடையழகு என வர்ணிக்கப்படுவது.
1. சாகித்தியம் 2. மடக்கு 3. யமகம் 4. அனுப்ராசம் 5. அந்நியப்ராசம்

4) தெலுங்கு மொழியில் சூளாதிகளை இயற்றியவர்.
1. புரந்தரதாஸர் 2. திருப்பதி அண்ணமாச்சாரியார்
3. திருப்பதி நாராயணசாமி 4. பட்டாபி ராமையர்.
5. தாளபாக்கம் கின்னையா

5) யுத்த களத்தில் பயன்படுத்தப்படும் வாத்தியம்.
1. குடமுழா 2. ரணபேரி 3. மத்தளம் 4. பிடில் 5. வீணை

6) பாத்கண்டே என்பவர் கையாண்ட இசைக்கருவிகளுள் ஒன்று.
1. ஸரோட் 2. ஸிதார் 3. புல்லாங்குழல் 4. சாரங்கி 5. ரபாப்

7) 'வலசி வச்சி' எனத் தொடங்கும் இராகமாலிகை வர்ணத்தின் பூர்வாங்க இராகங்கள்.
1. யதுகுலகாம்போதி, மோகனம், ஸ்ரீராகம், பிலகரி, காம்போதி.
2. மோகனம், காம்போதி, யதுகுலகாம்போதி, பிலகரி, ஸ்ரீராகம்.
3. கேதாரம், சங்கராபரணம், கல்யாணி, பேகட
4. சங்கராபரணம், பேகட கல்யாணி, கேதாரம்.
5. பேகட, கேதாரம், சங்கராபரணம், கல்யாணி.

8) மகாநாடக வீணை என அழைக்கப்படும் வாத்தியம்.
1. வயலின் 2. வயலின் 3. தம்புரா 4. ஸிதார் 5. கோட்டு வாத்தியம்

9) ஸகமதநிஸ் - ஸ்நிதமகரிஸ என்ற ஆரோகண அவரோகணத்தை உடைய இராகம்.
1. காம்போதி 2. ஸ்ரீரஞ்சினி 3. வசந்தா 4. ஆபோகி 5. ஸ்ரீராகம்

10) ஹிந்துஸ்தானிய 'இசையில் மால்கௌஸ்' என அழைக்கப்படும் இராகம்.
1. மோகனம் 2. ஆபோகி 3. ஆனந்தபைரவி
4. ஹிந்தோளம் 5. ஹம்சத்வனி

agaram.lk

11) மணிப்பிரவாள நடையில் 'உற்சவ பிரபந்தம்' என்ற நூலை இயற்றியவர்.
1. ஸ்வாதித் திருநாள் மகாராஜா 2. சாம்பமூர்த்தி 3. வேங்கடமகி
4. அருணாசல கவிராயர் 5. பாபநாசம் சிவன்.

12) ஓர் இராகத்தினைப் பாடும் போது அடிக்கடி உபயோகிக்கப்படும் ஸ்வரம்.
1. கிரகஸ்வரம் 2. நியாசம் 3. மந்தரம் 4. அம்சம் 5. அல்பத்துவம்.

13) உபதாள வாத்தியத்திற்கு ஓர் உதாரணம்.
1. தவில் 2. தம்புரா 3. ஜால்ரா 4. கடம் 5. தபேலா

14) 'இன்னமும் என் மனம்' என்ற பதவர்ணத்தினை இயற்றியவர்.
1. லால்குடி ஜெயராமன் 2. பாலமுரளி கிருஷ்ணா
3. ஸ்வாதித் திருநாள் மகாராஜா 4. அருணகிரிநாதர்
5. முத்துத் தாண்டவர்.

கவிகாளமேகம் என்ற படத்தில் நடித்தவர்.
அகில உலக இசை ஜோதி
1954 ல் ஜனாதிபதி விருதினைப் பெற்றவர்.
சிறந்த நாதஸ்வர விற்பன்னர்.

15) இத்தனை சிறப்புக்களையும் உடையவர்.
1. திருவாவடுதுறை ராஜரட்ணம் பிள்ளை 2. அரியகுடி ராமானுஜயங்கார்
3. பாலக்காட்டு மணி அய்யர் 4. பட்டணம் சுப்பிரமணி ஐயர்.
5. லால்குடி ஜெயராமன்

16) ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் தரானா என அழைக்கப்படுவது.
1. கீர்த்தனை 2. வர்ணம் 3. ஜாவளி 4. பதம் 5. தில்லானா

17) ஸரிகிமிபதநி என்ற சங்கேதங்களைக் கொண்டுள்ள இராகம்.
1. சண்முகப்பிரியா 2. கரகரப் பிரியா 3. மாயாமாளவகௌளை
4. கல்யாணி 5. கோகிலப் பிரியா

18) திரி அன்னியஸ்வர பாஷாங்க இராகத்திற்கு ஓர் உதாரணம்.
1. ஹமீர் கல்யாணி 2. பெஹாக் 3. ஹிந்துஸ்தான் காபி
4. அடானா 5. பரசு

19) 'பாஹிமாம் ஸ்ரீ' என்ற கிருதி அமைந்துள்ள இராகம்.
1. சிவரஞ்சினி 2. ஸ்ரீ ரஞ்சினி 3. தேஷ் 4. ஜனரஞ்சினி 5. தோடி

20) மியான்கிதெஷ், கியான்கி மல்கார் போன்ற இராகங்களை அறிமுகப்படுத்தியர்.
1. தான்சேன் 2. பாக் 3. மொசாட் 4. பீதோவன் 5. பாக்

agaram.lk

## பகுதி II

- **எல்லா வினாக்களுக்கு விடை தருக.**
- **சுருக்கமான விடை தருக.**

1) 1. சந்தப்பாவலர் என சிறப்புப் பெற்றவர் யார்?
   2. அலகு யாழ் என்ற பெயரையுடைய வாத்தியம் எது?
   3. பகுத்வனி வாத்தியங்களில் ஒன்று தருக.
   4. ஹம்சத்வனி இராகத்தின் மேள இராகம் எது?
   5. ஹிந்துஸ்தானி இசையில் கஜல் என்ற உருப்படி எதனைப் போன்றது.
   6. நேத்ர - ஶ்ரீ என அழைக்கப்படும் இராகம் யாது?
   7. ரிஷ்ய சிருங்கர், இது நிஜமா என்ற திரைப்படங்களில் நடித்த வீணை இசைக்கலைஞர் யார்?
   8. 10 தாட் முறையையும் பிலாவலை அடிப்படை இராகமாக அறிமுகப்படுத்தியவர் யார்?
   9. தாது மாது சம்பந்தமான அணிகளில் ஒன்று தருக.
   10. சட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்த மத்திமம், சதுஸ்ருதி தைவதம், கைசிகி நிஷாதம் ஆகிய ஸ்வரஸ்தானங்களை உடைய இராகம் எது?

### (ஆ பகுதி)

**எவையேனும் ஒரு வினாவிற்கு விடைதருக.**

1. 1. பகுத்துவம் என்பதன் வரைவிலக்கணம் கூறுக.
   2. இராகத்தின் பத்து லட்சணங்களையும் விளக்குக.

2. 1. கோடு கொண்டு வாசிக்கப்படும் வீணை அமைப்பினை உடைய வாத்தியம் யாது?
   2. படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.
   3. அமைப்பு, சிறப்பு, வாசிக்கும் முறை பற்றி விளக்குக.

agaram.lk

### (இ பகுதி)

**எவையேனும் இரு வினாவிற்கு விடைதருக.**

1. பின்வரும் இராகங்களுள் ஒன்றிற்கு லட்சணம் தருக.
   1. ஷண்முகப் பிரியா
   2. ஆபோகி
   3. ஶ்ரீரஞ்சனி
   4. ஹிந்தோளம்.

2. பின்வரும் உருப்படிகளுள் ஒன்றிற்கு லட்சணம் தருக.
   1. ஜாவளி    2. தில்லானா    3. சூளாதி

3. ஸ்வாதித் திருநாள் மகாராஜவாவின் வாழ்க்கையினையும் இசைத்தொண்டினையும் கூறுக.
4. நீர் பார்த்து ரசித்த இசைக்கச்சேரி பற்றி விமர்சனம் எழுதுக.